DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
Spl.S.C.No. 29/2024
P.W. 8

| | | |
|---|---|---|
| Name | : | திரு. செல்வராஜ் |
| Father's Name | : | திரு. முத்துசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 47 |

(Accused 1 and 2 are present. A3 and A4 are absent. Petition filed and allowed. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of May 2026.

**முதல் விசாரணை**

நான் சாமியார்தோப்பில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 செல்வி, அ.சா.2 பாஸ்கர் ஆகியோர்களை தெரியும். அவர்கள் பட்டியல் வகுப்பை சேர்ந்தவர்கள் ஆவார்கள். எதிரிகள் இந்து, நாயுடு வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். சம்பவம் தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சாட்சியின் முந்தைய வாக்குமூலத்தை பரிசீலத்து பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 157-ன் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)**

போலீசார் விசாரணையில் கடந்த 30.11.2022 அன்று பகல் மணி 3.00 மணி அளவில் நில அளவையர் அளந்து விட்டு சென்ற போது அ.சா.1 செல்வி மற்றும் அவரது குடும்பத்தினர் அவர்கள் இடத்தில் கல் ஊன்ற குழி தோண்ட ஆரம்பித்த போது எதிரிகள் அவர்களை சாதி பெயரை சொல்லி திட்டி அடித்து காயப்படுத்தினார்கள் என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்று சொல்லி எதிரிகள் என்னுடைய சாதியை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** (எதிரிகள் தரப்பில்)

இல்லை

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
Spl.S.C.No. 29/2024
P.W. 9

| | | |
|---|---|---|
| Name | : | திரு. பொன்னுசாமி |
| Father'sName | : | திரு. நல்லான் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 76 |

(Accused 1 and 2 are present. A3 and A4 are absent. Petition filed and allowed. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of May 2026.

**முதல் விசாரணை**

நான் மணப்பாறை, சாமியார் தோப்பில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் சுமார் 3.00 மணியளவில் நானும், பதியநாதனும் இருக்கும்போது ஒரு உதவி ஆய்வாளரும், ஒரு காவலரும் வந்து கையொப்பம் வாங்கினார்கள். அதில் நானும், பதியநாதனும் படித்து பார்த்து கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரிலுள்ள எனது கையொப்பம் **அ.த.சா.ஆ.3** ஆகும். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சாட்சியின் முந்தைய வாக்குமூலத்தை பரிசீலத்து பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 157–ன் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழுங்கப்படுகிறது.**

**<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>**

போலீசார் விசாரணையில் காவல் துணை கண்காணிப்பாளர் 1.12.2022ம் தேதி மதியம் 3.00 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயாரித்தபோது அதில் நானும், பதியநாதனும் கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு, தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

இல்லை.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.